# சுவிஸ்வாழ் தமிழ் முதியவர்களின் வாழ்வியல் சூழலும் தேவைகளும்

## சுருக்கம்



Schweizerisches Rotes Kreuz

காப்புரிமை 2018 சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கம், ஆரோக்கியம் மற்றும் இணைவாக்கப்பிரிவு
பணியளிப்பவர்: வயோதிபமும் குடிவரவிற்குமான தேசிய சபை மற்றும் சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கம்
வழிநடப்புக்குழு: அஜீகா துரைராஜா, நலவாழ்வு அமைப்பு: அழகிப்பொடி குணசீலன், மருத்துவத்தாதி:
வித்தியா சுப்ரமணியம், கரிதாஸ் பேர்ன்;: யூலியற் செல்லத்துரை, ஆலோசகர் இசா(isa) பேர்ன்,
மொழிபெயர்ப்பாளர்: சுமதி மாணிக்கப்போடி, நடுவர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் உதவித்தாதி: ஒல்கா அன்ரேஸ்,
மூன்றாம் உலகநாடுகளிற்கான பொறுப்பாளர் மற்றும் பல்துறை, கு.அ.தி.(SEM): லியனல் கப்வ், ஆய்வு
மற்றும் பரிசீலனைக்கான பணியாளர், கு.அ.தி.(SEM).

அட்டைப்படம்: காப்புரிமை கொண்ரெய்னர் TV AG
வடிவமைப்பு: கிராபிக் பிறின்ற் சுசெச (SRK)

தரவிறக்கம்: www.migesplus.ch/aeltere-tamilinnen-tamilen
www.migesplus.ch/tamouls-ages
www.alter-migration.ch

கீழுள்ள சுருக்கம் Gerber, Maria-Luisa und Hungerbühler, Hildegard 2018 அறிக்கையின் தழுவல்: சுவிஸ் வாழ் தமிழ் வயோதிபர்களின் வாழ்வியல் சூழலும் தேவைகளும். சுசெச(SRK) பேர்ன். இவ்வறிக்கையை டொச்மொழியில் கீழுள்ள இணையவழிகளில் தரவிறக்கம் செய்யலாம்.
www.migesplus.ch/aeltere-tamilinnen-tamilen உம் www.alter-migration.ch

உதவியளிப்பு:

HUMANITÄRE STIFTUNG SRK
FONDATION HUMANITAIRE CRS
FONDAZIONE UMANITARIA CRS

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

Federal Department of Justice and Police FDJP
**State Secretariat for Migration SEM**

WALDER STIFTUNG Wohnen im Alter

Alter und Migration
Nationales Forum Alter und Migration
Forum national âge et migration
Forum nazionale anzianità e migrazione

சுவிஸ்வாழ் தமிழ் முதியவர்களின் வாழ்வியல் சூழ்நிலை மற்றும் தேவைகளை ஆராய்வதற்கான பணியில் காத்திரமான பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் இத்தால் நன்றி கூறுகின்றோம். இந்த வரிசையில் முதலாவதாக அனுபவம் வாய்ந்த மானிடவியல் ஆய்வாளரும், தென்னிந்திய நிபுணருமான கலாநிதிதி டமாறிஸ் லூத்தி அவர்களிற்கும் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிற்கும், முதலாம் இரண்டாம் தலைமுறைகளைச் சேர்ந்த பேட்டியளித்த தமிழ்மக்களிற்கும், தொடர்பு கொண்ட சகல நிபுணர்களிற்கும், தெரிவுக்குழு மற்றும் வழிநடப்புக்குழுவினருக்கும் நன்றிகள் உரித்தாகுக. அடுத்ததாக பெருமனதுடன் நிதியுதவியளித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். அவர்கள் விபரம்: சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் மனிதாபிமானத்திற்கான நிறுவனம், குடிவரவிற்கானஅரசதிணைக்களம், வயோதிபமும் குடிவரவிற்குமான தேசிய சபை மற்றும் வால்டர் நிறுவனம்.

# 1. முகவுரை

அடுத்த ஐந்து தொடக்கம் பத்து வருடத்திற்குள் சுவிஸ்வாழ் தமிழர்களில் 10 000 வரையிலான முதலாம் தலைமுறையினர் ஓய்வூதியம் பெற்று முதுமையடைதலை எதிர்நோக்கவுள்ளனர். இம்முதுமையடைதல் சார் பரிணாமத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் ஒருவகைப் பயத்துடன் நோக்குவதாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்சமூகத்தைச் சேர்ந்த சுகாதாரத்துறைசார் நிபுணர்கள் மற்றும் தொடர்பாளர்கள் கணிப்பிடுகின்றனர். இவர்களது உந்துதலின் பெயரில் முதலாம் தலைமுறைத் தமிழர்களின் ஆரோக்கிய, சமூகவியல், பொருளாதார வாழ்வியலை கணிக்கவும் மற்றும் உதவிகள், கவனிப்பு, பராமரிப்பு மற்றும் உறைவிடம் சார் தேவைகளை அறியும் பொருட்டு வயோதிபமும் குடியேற்றமும் என்ற தேசிய சபையும் சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கமும் இணைந்து ஆய்வொன்றை முன்னெடுக்கப் பணியளித்தனர்.

# 2. ஆய்வுமுறை

ஐரோப்பிய சமூகத்தைச்சாராத பெரும்பான்மை அகதிக்குழுமமாகத் தமிழர்களே சுவிஸ்நாட்டில் விளங்குகின்றனர். இக்குழுமத்திற்கான „வயோதிபமும் தஞ்சக்-குடியேற்றமும்" சார்ந்த ஆய்வுகள் இதுவரை டொச் மொழியில் இல்லாததால் இந்த விரிவாய்வு அணுகுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆய்வுக்குழுவானது தரம்சார்ந்த மற்றும் தலைமுறைகளிற்கிடையிலான ஆய்வடிப்படையில் 61 நபர்களை தெரிவு செய்தனர். இதன்படி முற்கூட்டியே ஒழுங்கமைக்கப்பட்ட வழிகாட்டி மூலம் இவர்கள் நேர்காணல் செய்யப்பட்டதுடன் மேலதிகமாக தேர்வுக்குழுவிவாதமும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த 61 செவ்விகளும் கீழ்க்கண்டவாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

- 29 நபர்கள் ஏறத்தாழ 60 வயதுடைய முதலாம் தலைமுறையினர்.
- 14 நபர்கள் 16 வயதிற்கு மேற்பட்ட சுவிசில் கல்விகற்கும் இரண்டாம் தலைமுறையினர்.
- 18 நபர்கள் சுகாதார- மற்றும் வயோதிபப்பராமரிப்புத் துறையைச்சேர்ந்த நபர்கள்.
- இரு தலைமுறையையும் சேர்ந்த, தமிழ் பின்புலத்தை உடைய நான்கு நபர்களைக் கொண்ட தெரிவுக்குழு.

# 3. பெறுபேறுகள்

**சிறு கண்ணோட்டம்**

முதலாம் தலைமுறையினரின் வாழ்வானது தாழ்-ஊதியப்பிரிவில் கடுமையாக உழைத்ததால் ஏற்பட்ட ஆரோக்கியப் பளுக்களையும் வயோதிபகால வறுமையையும் கொண்டுள்ள அதே நேரம் குடும்பத்தினதும் புலம்பெயர் அமைப்புக்களினதும் அரவணைப்பையும் கொண்டதாகும். சுவிஸ் சுகாதார அமைப்புக்களைப்பற்றியும் வயோதிபப்பராமரிப்பு சார் சேவைகள் பற்றியும் அடைப்படையில் அறியப்பட்டிருப்பினும், சமூகக்காப்புறுதிகள், முதுமைக்காப்புறுதி மற்றும் ஆரோக்கிய மேம்பாடு, முற்காப்பு போன்ற விடயங்களில் தகவற்பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. முதலாம் தலைமுறையினர் சுவிசில் தமது உழைப்பிற்கான கௌரவத்தைக்கோரி நிற்கின்றனர். இலங்கைக்குத் திரும்பிச்செல்வதற்கான சூழலை இவர்களால் அடையாளம் காணமுடியவில்லை. முதுமையடைந்த காலத்திலும் பராமரிப்பு- மற்றும் வீட்டுப்பணிக்கான வெளி உதவியுடன் இயன்றவரை சொந்த வீட்டில் பிள்ளைகளிற்கு அருகாமையில் வாழவே இவர்கள் விரும்புகின்றார்கள். சிலர் இலங்கைக்கும் சுவிசிற்கும் இடையில் மாறிமாறி வாழ விரும்புகின்றனர் (சிலர் இப்போதே அவ்வாறு செய்கின்றனர்), இதற்கு இலங்கைக்கும் சுவிசிற்குமிடையிலான சமூகநலக்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று ஊக்குவிப்பாக அமையும். வயோதிபர் இல்லத்தில் வாழ்வது பலருக்கு நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாக உள்ளது. இது குடும்பப்பெயருக்கு இழுக்காகக் கருதுகின்றனர். இதுசார்ந்து இரண்டாம் தலைமுறையினர் கூறுகையில் வயோதிபர் இல்லத்தில் பணியாளர்களுடனும் பிற இல்லவாசிகளுடனும் உரையாட மொழி தடையாக இருக்கும் எனவும் இதனால் இவர்கள் தனிமை நிலைக்கு ஆளாக நேரிடும் என்கின்றனர். இருந்தும் இரு தலைமுறையினரும் தமிழருக்கென தனியான பிரிவைக்கொண்ட அல்லது பல்லினத்தன்மைகொண்ட வயோதிபர் இல்லம் ஒன்றை மாற்றுத் தீர்வாக ஏற்றுக்கொள்கின்றனர். எவ்வகையிலும் தமிழ் முதியவர்களின் தேவைகள் பூர்த்தியாகும் வகையில் அவர்களது மொழிசார் புரிதல், உணவுமுறை, சமயவழிபாடு, இருபாலாருக்குமான தனித்தனியான பராமரிப்பு போன்றவற்றைப்பேணுவதற்கான சூழலும் இறப்பின்போது கௌரவமான பராமரிப்பும் பின்னர் கலாச்சார முறைப்படியான இறுதிச்சடங்குகளிற்கும் வழிவகுக்கப்பட வேண்டும். தமிழ் சமூகத்தின் முதலாம் தலைமுறையினருக்கு எதிர்காலத்தில் தாயகம் திரும்பும் திட்டங்கள் எதுவும் இல்லை. தமிழ் சமூகமும் சுவிஸ் சுகாதார- மற்றும் சமூகநல அமைப்புகளும் ஒருமித்த கருத்துடன் தமிழ் முதியவர்களிற்கான பொருத்தமான கவனிப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகள் சார்ந்த வேலைத்திட்டங்களை சவாலுடன் எதிர்நோக்குகின்றனர். ஏற்கனவே நடைமுறையிலுள்ள சேவைகள் சார்ந்த தகவல்களுடன் சமூகநல- முற்காப்பு அமைப்புகள் சார்ந்த தகவல்களை தடங்கலற்ற வழியில் அளிப்பது முக்கியம். வயோதிபப்பராமரிப்பைச் சேர்ந்த அமைப்புக்கள் இப்புதிய பயனாளிகளின் வருகைக்குத் தம்மைத் தயார் செய்ய வேண்டும்.

**விபரமான பெறுபேறுகள்**

### இதுவரையான சுயசரிதையின் பிரதிபிம்பமே வயோதிபகால வாழ்க்கைச்சூழல்

ஒட்டுமொத்தத்தில் சுவிஸ்வாழ் தமிழ் வயோதிபர்களின் (ஏறத்தாழ 60 வயது) வாழ்க்கையானது அவர்களது சமூகஇணைவாக்க- மற்றும் வேலை சார்ந்த வரலாற்றின் பிரதிபிம்பமாகவே உள்ளது. வயோதிப நிலை வரை அவர்களது வாழ்க்கை பின்வரும் வாழ்வியல் அனுபவங்களை

உள்ளடக்கியதாக உள்ளது: போரினாலும் புலப்பெயர்வாலும் ஏற்பட்ட உளவடுக்கள், தனிப்பட்டமுறையில் வன்முறைக்காளாகியுள்ளமை, ஆரம்பத்தில் ஐயத்துடனும் சிலசமயம் பகையுணர்வுடனும் உற்றுநோக்கிய பிற சமூகம் ஒன்றில் குடியேறி பல தடைகளையும் சமாளித்து புதிய வாழ்வொன்றை அமைத்தமை, தாழ்-ஊதியப்பிரிவில் கடுமையாக உழைத்ததால் ஏற்பட்ட உடற்பளு. இதற்கப்பால் எப்போது தாயகம் திரும்புவோம் என்ற ஆதங்கம், தமிழீழம் என்ற சொந்த நாடு கிடைக்கும் என்ற நம்பிக்கை அடியோடு சிதைக்கப்பட்டதால் நிறைவேறாத மனத்துயர். இவ்வனைத்துக் காரணிகளும் வயோதிப காலத்தில் உடல்-உள ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

### புலம்பெயர் தமிழர்களின் சமூகவலைப்பின்னல் - வளமும் பொறுப்பும்

ஐரோப்பிய சமூகத்தைச்சாராத பெரும்பான்மையான அகதிக்குழுமமாக தமிழர்களே சுவிஸ்நாட்டில் விளங்குகின்றனர். இந்த வகையில் இவர்களுக்குரிய சமூகவாழ்விற்கான கட்டமைப்புக்கள் ஏற்கனவே இல்லாததால், இவற்றை இங்கு உருவாக்கியவர்கள் என்ற வகையில், இவ்விடயத்தில் இவர்கள் ஒருவகை முன்னோடிகள் ஆவர். இன்று பரவலாக உள்ள இவர்களது பல செயற்திட்டங்களை முன்னெடுக்கும் கழகங்களைக் கொண்ட பெரும் சமூகநலக் கட்டமைப்புக்கள் இவர்களது வளத்திற்கும் பிரமிக்கத்தக்க சுயநிர்வாகத் திறனுக்குமான சான்றிதழாகும். இவ்வகையில் ஒருபுறம் முதலாம் தலைமுறையினரின் பொது அடையாளத்தை உறுதிப்படுத்தி ஒருவகைத் சமூக- மற்றும் உணர்வுரீதியான தாயகத்தைத் தக்க வைக்கின்றது. மறுபுறம் இச்சமூகத்திற்கே உரித்தான நடைமுறைகள், வரைமுறைகள், கடமைகள் மற்றும் சமூகக்கட்டுப்பாடுகளும் உண்டு, இவை சிலசமயம் சுமையான பக்கங்களைக் கொண்டதாகும்.

### வயதான காலத்திற்கான நல்ல கவனிப்பும் பராமரிப்பும் - மருத்துவமனையில் தங்காமல் வெளிநோயாளராகச் சிகிச்சை பெறல்.

நல்ல கவனிப்பும் பராமரிப்பும் சார்ந்த கேள்விக்குப் புலம்பெயர் தமிழர்களிடம் ஒருமித்த தெளிவான நிலைப்பாடு இல்லை. இது இக்காலத்தின் பொதுவான சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றது. பலதரப்பட்ட வாழ்வியல் சூழல்கள் வயோதிபத்தில் பலதரப்பட்ட தேவைகளாகப் பரிணமித்து கவனிப்பு மற்றும் பராமரிப்புச் சார்ந்த பலதரப்பட்ட திட்டங்களையும் அணுகுமுறைகளையும் வேண்டி நிற்கின்றன. குடியேறியோரின் சுயசரிதையைக் கருத்திலெடுத்து அவர்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறைக்கேற்ற வயோதிபகால வாழ்க்கைச்சூழல் தகுந்த முறையில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட வேண்டும். இவ்வறிக்கைக்கு அடிப்படையாக விளங்கும் முதலாம் இரண்டாம் தலைமுறையினரின் நேர்காணல் சுவாரசியமான பெறுபேறுகளைத் தருகின்றது. வீட்டிலிருந்து பராமரிப்பைப் பெறமுடியாத கட்டம் வந்தால் இறுதியில் இங்குள்ள பொதுவான வயோதிபர் இல்லத்தில் சேர்வது பற்றி மூத்த தலைமுறையினர் இன்றே சிந்திக்கின்றனர். ஆகவே இத்தகைய வயோதிபர் பராமரிப்பு இல்லங்கள் தமிழ் மற்றும் பிறநாட்டு வயோதிபர்கள் சேர்ந்து வாழும் வகையில் அமைக்கப்பட வேண்டும். குடும்ப அங்கத்தவர்களால் பெற்றோரைப் பராமரிப்பது சார்ந்த விடயத்தில் ஏற்பட்டுள்ள சுவாரசியமான பரிணாமம்: சொந்தப் பிள்ளைகள் தம்மைப் பராமரிக்க வேண்டும் என்ற வேண்டுதலோ எதிர்பார்ப்போ முதலாம் தலைமுறையினரிடம் இல்லை.

இரண்டாம் தலைமுறையினர் இங்குள்ள மாறுபட்ட வாழ்வியல் சூழலால் வேலையையும் உறவினர் பராமரிப்பையும் கையாள்வதில் சிரமத்தை எதிர்கொள்வர் என்பதை இவர்கள் உணர்கின்றனர். இரண்டாம் தலைமுறையினரோ - பெற்றோரின் எதிர்பார்ப்புகளிற்கு அப்பாற்பட்டு- இவர்களைப்பராமரிக்க தாம் கடமைப்பட்டுள்ளேம் என்பதை மனதில் வைத்துள்ளனர். இந்நிலைப்பாடு பிற வெளிநாட்டுக்குழுமங்களிலும் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. ஏனெனில் தமது முன்னேற்றத்திற்கு தமது பெற்றோரின் கடின உழைப்பு எவ்வளவு காரணமாக உள்ளது என்பதை இவர்கள் அறிந்துள்ளனர். தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு காரணி மேலதிகமாக உள்ளது. அதாவது பெற்றோரை வயோதிபர் இல்லத்திற்கு அனுப்புவது குடும்பப்பெயரைக் கெடுக்கும் என்ற நிலைப்பாடாகும். இந்நிலைப்பாட்டையே இலங்கையிலும் இவர்களது பெற்றோர் அறிந்திருந்தனர். இது இங்கு இரண்டாம் தலைமுறையினராலும் பெயருக்கஞ்சிக் கருத்திலெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் தலைமுறையினரில் பலர் தமது கல்வியை சுவிசில் சுகாதார-மற்றும் தாதித்துறையில் மேற்கொண்டுள்ள போதும் முதலாம் தலைமுறையினரும் வயோதிபர்-மற்றும் பராமரிப்பு இல்லங்களில் தொழில் புரிந்து அங்கு எவ்வாறு வயோதிபர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள் என்பதை கண்டிருப்பினும் இப்படியான ஒரு அச்சம் நிலவுகின்றது.

சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்: நேர்காணல் செய்யப்பட்ட முதலாம் தலைமுறையினர் இயன்றவரை தமது வயோதிப காலத்தைச் சொந்த வீட்டில் தமது நான்கு சுவர்களிற்குள்ளேயே, அதேநேரம் தமது பிள்ளைகளிற்கு அருகாமையில் அவர்களிடமிருந்து அன்றாட உதவிகளைப்பெற்று வாழ விரும்புகின்றனர். பராமரிக்க வேண்டிய நிலை எய்தும் காலத்தில் நடமாடும் பராமரிப்புச்சேவை பெற்று வாழ விரும்புகின்றனர். ஆனால் இவர்கள் வயோதிப காலத்தில் வறுமைக்காளாகும் நிலை உள்ளதால்- நடைமுறையிலுள்ள நடமாடும் பராமரிப்புச்சேவை மற்றும் வீட்டுப்பணிக்கான உதவிகளைப் பெறுவதற்கு இவர்களிற்கு நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை உள்ளது. இத்தகைய சேவையினால் போதுமான பராமரிப்பை வழங்க முடியாத பட்சத்தில் இறுதித்தீர்வாக வயோதிபர் பராமரிப்பு இல்லங்களில் வாழ்வைத் தொடர உத்தேசமாயுள்ளனர். இருந்தும் வயோதிபர்-மற்றும் பராமரிப்பு இல்லம் சார்ந்து தெளிவான முடிவில்லை. ஏற்கனவே உள்ள இல்லங்களில் தமிழர்களின் வாழ்வியல் சார்ந்த புரிதலுடன் கூடிய சூழலை ஏற்படுத்துவதா, தமிழ்சமூகத்திற்கென தனியான ஒரு பிரிவை ஏற்படுத்துவதா என்ற விடயங்கள் பலவிதமாக மதிப்பிடப்படுகின்றது. இவ்விடயத்தில் பிற நாட்டவர்களைப்போல் தனிப்பட்ட தேவைகளிற்கேற்ப எதிர்பார்ப்புகள் மாறுபடுகின்றன.

### தலைமுறைகளிற்கிடையில் மாற்றம் கண்டுள்ள குடும்பஉறவுகள்

சுவிஸ் புலம்பெயர் தமிழர்களிற்கிடையிலே தலைமுறைகளிற்கிடையிலான உறவு மாற்றம் அடைந்து வருகின்றது. இதன் பிரதிபலிப்பாக தமது பிள்ளைகள் இங்குள்ள வாழ்க்கை முறைக்கேற்ப (நட்பு, திருமணம், வாழ்வுமுறை) பயணிப்பதை முதலாம் தலைமுறையினர் - இது இதுவரையான குடும்பமுறைக்குச் சவாலாக இருந்தும்- ஏற்கத்தொடங்கியுள்ளனர். மறுபக்கத்தில் சில விடயங்களில் முதலாம் தலைமுறையினர் பிள்ளைகள் சொந்தக் காலில் நிற்பதை

விரும்பவில்லை, உதாரணத்திற்கு தனியாக வசிப்பது. முன்பு போலவே இப்போதும் தலைமுறைகளிற்கிடையிலான உறவு உறுதியான பிணைப்புக் கொண்ட பரிமாற்று உறவு முறையாக உள்ளது.

## அறுதியாக இலங்கைக்குத் திரும்புவதற்குப் பதிலாக வயோதிபத்தில் அங்கும் இங்கும் பயணித்தல்.

எண்பதுகளில் புலம்பெயர்ந்து குடியேறிய தமிழர்கள் இன்று பல்லாண்டுகள் கழித்து சமூகவியல் மாற்றம் ஒன்றிற்கு ஆளாகியுள்ளனர். ஆனால் இவர்கள் மட்டுமல்ல, இவர்களது முன்னைய தாயகமும் மாற்றம் கண்டுள்ளது. முன்னர் இலங்கையில் இருந்த சமூகத் தொடர்புகள் அனேகமாக இன்று மருவி விட்டன குடும்ப அங்கத்தவர்களும் உற்றார் உறவினரும் இறந்து விட்டனர் அல்லது உலகின் பிற நாடுகளில் பரவி வாழ்கின்றனர். என்றோ ஒரு நாள், குறைந்தபட்சம் வயதான காலத்திலாவது சுதந்திரமான தனி நாடான தமிழீழத்திற்குத் திரும்பலாம் என்ற ஆழ்மனவிருப்பு 2009ல் ஏற்பட்ட விடுதலைப்போரின் அறுதியான தோல்வியுடன் முழுவதுமாக நிர்மூலமாகி விட்டது. முன்பிருந்தது போல் உறுதியற்ற, பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதென்ற கேள்விக்கே நிச்சயமாக இடமில்லை. வயதான காலத்தில் மற்ற இனக்குழுக்களைப்போலவே தமிழர்களும் சுவிசை நிரந்தர வாழ்விடமாகத் தெரிவதற்குரிய கேந்திரக் காரணிகளாக இவர்களது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இங்கு வாழ்வதுடன் சுவிசில் வயதான காலத்தில் கிடைக்கக்கூடிய சமூகநல- மற்றும் மருத்துவக்காப்புறுதிகளும் உள்ளன.  ஆகையால் வயோதிப காலத்தில் அங்கும் இங்கும் பயணிப்பதால் தேவைக்கேற்ப தமது வாழ்வை அமைப்பதுடன் எங்கு வாழ்வது என்ற முடிவைத் தற்போது எடுக்கத் தேவையில்லை. இந்த வகையில் இலங்கைக்கும் சுவிசிற்கும் இடையில் தமிழர்கள் தற்காலிகமாக வாழ முயற்சி செய்கின்றனர் அல்லது ஏற்கனவே அவ்வாறு வாழ்ந்து வருகின்றனர். இவ்விடயத்தில் தமிழர்கள் தகுந்த சட்டச்சூழலை விரும்புகின்றனர். இலங்கைக்கும் சுவிசிற்கும் இடையிலான ஒரு சமூகநலக்காப்புறுதி ஒப்பந்தம் இவ்விடயத்தை இலகுபடுத்தும்.

## இறத்தலும் மரணமும்: இறப்பு என்பது தனிப்பட்ட விடயமல்ல பொது விடயமே.

முன்கூட்டியே இறப்பு சார்ந்து கலந்தாலோசிப்பது தமிழ்குடும்பங்களில் விரும்பப்படாத ஒரு விடயமாகும். அதே நேரம் இறப்பு சம்பவித்தால் அது ஒரு தனியார் விடயமல்ல. மாறாக குடும்பமும் சமூகமும் சார்ந்த ஒரு நிகழ்வாகும். ஒருவர் மரணப்படுக்கையில் இருப்பினும் அவரைக் குணமாக்க முயலும் மருத்துவச் சேவையே குடும்ப அங்கத்தவர்களால் இறுதிவரை எதிர்பார்க்கப்படுகின்றது. இறப்பை இலகுவாக்கக்கூடிய பராமரிப்பு அனேகமாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நல்ல இறப்பு என்பது கௌரவமான, சம்பிரதாயத்துடன் இவ்வுலகிலிருந்து விடைபெறுவதாகும். தகனக்கிரியைகள் பெரிய பொதுநிகழ்வாக நடத்தப்படுகின்றது. தகனக்கிரியைகளில் பங்கெடுக்கும் நபர்களின் எண்ணிக்கை சுவிஸ் மயானங்களிற்கு வழக்கமில்லாத ஒன்றாகும். இவ்விடயத்தில் இது சார்ந்த நிர்வாகிகள் மாற்றுக்கலாச்சார சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு தமது திட்டமிடல்களை மேற்கொள்வது சிறந்தது.

**தமிழ் வயோதிபர்களின் வாழ்வியல் சூழலும் தேவைகளுக்குமான ஆய்வுகளின் பெறுபேறுகள் எதிர்காலச் செயற்திட்டங்களிற்கான தேவையைக் காட்டி நிற்கின்றன. இதனடிப்படையில் சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கமும் மற்றும் வயோதிபமும் குடியேற்றமும் என்ற அமைப்பும் மேலுள்ள சிபாரிசுகளை முன்மொழிந்துள்ளனர். இவற்றை அரச மற்றும் சுகாதார, சமூகவியல், குடியேற்ற, சமூகஇணைவாக்கம் சார்ந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் கருத்திற்கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். பிரத்தியேகமாக வயோதிபர்பராமரிப்புத் துறையைச் சார்ந்த சேவையாளர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டுவரப்படுகின்றது.**

சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம்
ஆரோக்கியமும் சமூகஇணைவாக்கமும்

**Schweizerisches Rotes Kreuz**, Gesundheit und Integration
Werkstrasse 18, Postfach, CH-3084 Wabern
Telefon +41 58 400 4529
www.redcross.ch

ZEWO
ZERTIFIZIERT CERTIFIÉ CERTIFICATO